டாக்டர் மு. சீனியம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுப்பாளயத்தில் சுமார் 40 ஏக்கர் அளவிற்குப் புறம்போக்கு நிலம் இருக்கிறது. 1987 ஆம் ஆண்டு நமது டாக்டர் புரட்சித் தலைவர் ஆட்சியில் எடுக்கப்பட்டு, திராவிட முன்னேற்றக் கழகத்தின் விரோத ஆட்சியில், வீடு கட்டிக் கொடுக்கப்படாமல் விடுபட்டுவிட்டது. இன்றைக்குத் தமிழக முதல்வரைத் தெய்வமாக வணங்கிக் கொண்டிருக்கிற, 4 முறையும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை வெற்றி பெறச் செய்த அந்த ஏழை மக்களுக்கு, அந்தப் புறம்போக்கு நிலத்தை எடுத்து, வரும் நிதி ஆண்டிலாவது அவர்களுக்கு வீடு கிடைத்திட நமது மாண்புமிகு புரட்சித் தலைவியின் ஆட்சியில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபற்றி பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 334.—திரு. ப. கலியபெருமாள். மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்,

334—

சத்துணவு மையம் இல்லாத ஊர்களுக்கு சத்துணவு மையம் அமைத்தல்

*4970 — திரு. ப. கலியபெருமாள்:

மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) பல ஊராட்சிகளில் தொலை தூரத்துப் பகுதியிலுள்ள குழந்தைகளுக்குப் பயன்படும் வகையில் சத்துணவு மையம் இல்லாததை அரசு அறியுமா?

(ஆ) சத்துணவு மையம் இல்லாத ஊர்களுக்கு அதை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ); சத்துணவு மையம் இல்லாத எல்லா இடங்களிலும் தமிழ்நாடு ஊட்டச்சத்து திட்டத்தின்கீழ் படிப்படியாக மையங்கள் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. ப. கலியபெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களால் கொண்டுவரப்பட்ட இந்தச் சத்துணவுத் திட்டம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களால் சீராகவும் செம்மையாகவும்

1992 மார்ச் 24]

செயல்படுத்தப்படுகிற இந்த சத்துணவுத் திட்டம், என் பகுதியில் ஓராசிரியர் பள்ளிகளாக இருக்கின்ற காதாற்றிப்பட்டி, செம்பையன்கிளரி தண்டராயம்பாடி ஆகிய பகுதிகளில் உள்ள பள்ளிகளில் போதிய மாணவர்கள் இருந்தும் சத்துணவு மையம் அமைக்கப்படாமல் இருப்பதை அரசு அறியுமா? அந்தப் பள்ளிகளிலும் சத்துணவு மையங்களை அமைக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–30

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கேட்டிருக்கிற கேள்வியில் குழந்தைகளுக்குப் பயன்படும் வகையில் சத்துணவு மையம் பற்றிக் கேட்டிருக்கிறார்கள். அவைகள் குழந்தைகள் நல மையம் என்று பொருள் கொள்ளப்படும். ஏற்கனவே தமிழகத்தில் 28,500 குழந்தைகள் நல மையங்கள் இயங்கி வருகின்றன. இதில் சுமார் 18 இலட்சம் குழந்தைகள் பலன் பெறுகிறார்கள். புதிய மையம் துவக்க வேண்டுமென்றால் குறைந்தபட்சம் 70 குழந்தைகள் தேவை; துவக்க உத்தேசிக்கும் பகுதி தற்போது மையம் செயல்படும் பகுதியிலிருந்து மூன்று கிலோ மீட்டர் தூரத்திற்கு அப்பால் இருக்க வேண்டும். அப்படி இருந்தால் நிச்சயமாகச் சத்துணவு மையம் குழந்தைகள் நல மையம் துவக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

வினா எண் 335.—திரு. கே. கந்தசாமி, திரு. எம். எம். எஸ். அபுல்ஹசன், திரு. ஆ. சுப்புரத்தினம், மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர்.

335—

ஆதிதிராவிடர் மாணவர்களுக்கான உதவித் தொகையை உயர்த்துதல்

*2497—திரு. கே. கந்தசாமி,

திரு எம். எம். எஸ். அபுல்ஹசன்,

திரு. ஆ. சுப்புரத்தினம்.

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

ஆதிதிராவிடர் மாணவர்களுக்கான உதவித் தொகையும் விடுதி மாணவர்களுக்கான தொகையும் விலைவாசி உயர்வால் போதுமானதாக இல்லாததால் இதனை உயர்த்த அரசு நடவடிக்கை எடுக்குமா?